# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில்அருகில்), எல்டாம்ஸ்ரோடுசந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை 600 018. தொலைபேசி எண்: 24347590**

**ஆணை நாள் – 12.02.2015**

**முன்னிலை**

## திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,
## மாநில தகவல் ஆணையர்

**வழக்கு எண். 56954/F/2013**

| | | |
|---|---|---|
| திரு. மு.பைரவநாதபூபதி,<br>வழக்குரைஞர்,<br>பு.எண்.19, ப.எண்.9,<br>ராஜநாயக்கன் தெரு,<br>தேனாம்பேட்டை, சென்னை–18. | .. | மேல்முறையீட்டாளர் |
| பொதுத் தகவல் அலுவலர்/செயற்பொறியாளர்,<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்<br>கழகம், தென்சென்னை மின் பகிர்மான வட்டம்,<br>தாம்பரம், சென்னை–600 045. | .. | பொது அதிகார அமைப்பு |

*****

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று (12.02.2015) நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு. மு.பைரவநாதபூபதி மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு.எம்.செல்வராஜ், செயற்பொறியாளர், தென்சென்னை மின்பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தாம்பரம் , சென்னை–45 ஆஜரானார்கள்.

2. மனுதாரர், 09.12.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (12.02.2015) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 09.12.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த

மனு மற்றும் 09.11.2013 அன்று சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் செல்லியம்மன் நகர், எண்.31/இ, பச்சைமலை ஸ்ரீதேவி கருமாரியம்மன் கோவிலுக்கு சொந்தமான பதிவு எண்.389/4, சர்வே எண்.401 மற்றும் 402 ஆகிய இடத்தில் ஓலை குடிசை போட்டுக்கொண்டு, அதற்கு மின் இணைப்பு எண் 293/008/923/1292 கே.முரளி, த/பெ. இ.கிருஷ்ணன் என்பவருக்கு கொடுக்கப்பட்டதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு, 11.05.2009 அன்று மின்வாரியத்தால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, பின்பு வழக்கறிஞர் அறிக்கை மூலம், மின் தடையில்லா சான்று கொடுத்தபின் மின்இணைப்பு கொடுக்கப்பட்டதாகவும், அந்த மின் இணைப்பு மீண்டும் அந்த இடத்தில் கொடுக்க என்னென்ன சான்றாவாணங்கள் மின்வாரியம் பெற்றுள்ளது என்ற விவரங்களைக் தகவல்களாகக் கேட்டிருக்கிறார். குறித்துரைக்கப்பட்ட கால வரையறைக்குள் தகவல்கள் எதுவும் வழங்கவில்லை எனக்கூறி, சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 09.11.2013 அன்று முதல் மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. பொதுத் தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர், தனது 11.11.2013ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாகத் தகவல் தெரிவித்திருக்கிறார். உரிய தகவல்களை வழங்கவில்லை எனக்கூறி, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 09.12.2013 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. மேல்முறையீட்டாளர் ஆணையத்திற்குத் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்றைய விசாரணைக்கு (12.02.2015) எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு திரு.கே.முரளி என்பவருக்கு மின்வாரியத்தால் எவ்வித மின் இணைப்பும் வழங்கப்படவில்லை எனவும், மனுதாரருக்கு 11.11.2013ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கிறார். மேலும் இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர், மனுதாரருக்கு மேலும் சில ஆவணங்களை வழங்கினார். மனுதாரரும் அதனைப் பெற்றுக் கொண்டார்.

5. ஆக, இந்த வழக்கைப் பொறுத்தவரை, மனுதாரருக்கு அவர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களும் வழங்கப்பட்டுள்ள நிலையில், இதில் மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய வேறு அம்சங்கள் எதுவுமில்லை எனக் கருதி, இந்த மேல்முறையீடு இத்துடன் முடிக்கப்படுகிறது.

**ஒம்/— (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 56954/F/2013</u>**
பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
தென்சென்னை மின் பகிர்மான வட்டம்,
தாம்பரம், சென்னை—600 045.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு. மு.பைரவநாதபூபதி,
வழக்குரைஞர்,
பு.எண்.19, ப.எண்.9,
ராஜநாயக்கன் தெரு,
தேனாம்பேட்டை, சென்னை—18.

*jb*